வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 130 of 2018

வழக்கு சாட்சி – PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ரபிக் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | முகமதுஹனிபா | தொழில் | : | டெய்லர் |
| கிராமம் | : | வெங்கடேஸ்வரநகர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | திருப்பூர் | வயது | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05.10.2023.

(எதிரி ஆஜர்).

முதல் விசாரணை: நாள்: 05.10.2023

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு டெய்லராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன மாணிக்கராஜ், கார்த்திக் ஆகியோர்களை எனக்கு தெரியும். மாணிக்கராஜாவின் அண்ணன் கார்த்திக் புதிய ஆமினி கார் வாங்கி இருந்தார். அதற்கு சீட் கவர் மற்றும் இன்டிரியர் வேலை செய்யவேண்டி கோவைக்கு 18.12.2017 ஆம் தேதி சென்று இருந்தார்கள். மறுநாள் காலை 19.12.2017 ஆம் தேதி நான் வீட்டில் இருந்தபோது இசாக் என்பவர் எனக்கு போன் செய்து ஆமினி காரை உமகது உசேன் ஓட்டிக்கொண்டு, காரில் மாணிக்கராஜ், கார்த்திக், அஜ்மீர், மணிகண்டன் ஆகியோர்கள் காரில் பல்லடம் நோக்கி வந்ததாகவும், திருச்சி–கோவை ரோட்டில் லட்சுமி மில் அருகில் GTN கம்பெனி அருகில் எதிர் திசையில் வந்த கன்டெய்னர் லாரி மோதி விபத்து ஏற்பட்டதாகவும், விபத்தில் காரில்வந்த 4 பேரும் இறந்துவிட்டதாகவும் தகவல் சொன்னார்கள். நான் தகவல் கேள்விப்பட்டு பல்லடம் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தேன். மாணிக்கராஜ், கார்த்திக் ஆகியோர்களின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தார்கள், நான் உடனிருந்தேன். விபத்தில் இரண்டு நபர்களுக்கு காயம் ஏற்பட்டு இருந்தது, அவர்களை திருப்பூர் ரேவதி மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. இசாக் எனக்கு தகவல் சொன்னார் என்று சொல்லியுள்ளதில் எத்தனை மணிக்கு, எந்த போனிலிருந்து தகவல் சொன்னார் என்ற விபரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கைெயழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.10.05 19:34:31 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 130 of 2018

வழக்கு சாட்சி – PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.முபாரக் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | உசேன் | தொழில் | : | பனியன் கம்பெனி வைத்துள்ளேன் |
| கிராமம் | : | மணியாரம்பாளையம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | திருப்பூர் | வயது | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05.10.2023.

(எதிரி ஆஜர்).

முதல் விசாரணை: நாள்: 05.10.2023

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு பனியன் கம்பெனி வைத்து தொழில் செய்து வருகிறேன். எனது கம்பெனியில் ஆறுமுகம் மகன் மாணிக்கராஜா மேலாளராக வேலை பார்த்தார். கடந்த 18.12.2017 ஆம் தேதி நான் வீட்டில் இருந்தபோது மாணிக்கராஜாவின் அண்ணன் கார்த்திக் புதிதாக ஆமினி கார் வாங்கியுள்ளதாகவும் அதற்கு சீட் கவர் மற்றும் இன்டிரியர் வேலை செய்வதற்காக கோவைக்கு சென்று வருவதாக என்னிடம் சொல்லி சென்றார்கள். பின்னர் இரவு 11.30 மணியளவில் ரபிக் என்பவர் எனக்கு போன் செய்து கம்பெனியில் வேலை செய்த மாணிக்கராஜா, அவரது அண்ணன் கார்த்திக் மற்றும் அவரது நண்பர்கள் சேர்ந்து மொத்தம் 5 பேர் ஆமினி காரில் சீட் கவர் மற்றும் இன்டிரியர் வேலையை முடித்துவிட்டு பல்லடம் நோக்கி வரும்போது லட்சுமி மில் GTN கம்பெனி அருகில் கன்டெய்னர் லாரி மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், அதில் 4 நபர்கள் இறந்துவிட்டதாகவும் தகவல் சொன்னார்கள், நான் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று எடுத்துரைத்தால் அவ்வாறே முடித்துவைக்கப்படுகிறது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.10.05 19:34:36 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.